00026

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்ப கல்வித்துறை

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி

இறுதிப் பரீட்சை

**EPU6231 –** வழிகாட்டலும் ஆலோசனையும்

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி : **12/03/2023** நேரம்:மு.ப 09.30 – மு.ப 11.30

# பகுதி I

1. 'வழிகாட்டல்' 'ஆலோசனை வழங்கல்' ஆகிய பதங்களை வரையறுக்க.

2. நாங்கள் ஏன் பாடசாலைகளில் வழிகாட்டல்களையும் ஆலோசனை வழங்கல்களையும் மேற்கொள்ளவேண்டுமென விளக்குக.

3. ஆலோசனை வழங்குபவரின் பண்புகளை பட்டியலிடுக.

4. சீராக்கல் பிரச்சினை என்னும் பதத்தினை உதாரணத்துடன் வரையறுக்க.

5. பாடசாலைப் பயம் (School Phobia) இன் அறிகுறிகளை பட்டியலிடுக.

6. பிள்ளைகளின் சீராக்கல் பிரச்சினை தோற்றம்பெறுவதில் செல்வாக்கு செலுத்தும் **இரண்டு** (02) காரணிகளை விபரிக்க.

7. பிள்ளையொன்றின் சாதாரண விருத்தியின் முக்கிய அம்சங்களை சுருக்கமாக விளக்குக.

8. மாஸ்லோவின் படிநிலை தேவைக்கூம்பினை வரைந்து விளக்குக.

**(8x5 =** 40 புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலுக்கு கோட்பாட்டை மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

ii. தனியாளுக்கும் சமூக மட்டத்திலும் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் அளிக்கப்பட வேண்டியதன் தேவையை மீளாய்வு செய்க. (12 புள்ளிகள்)

10.

i. ஆலோசனை வழங்கலின் வேறுபட்ட கட்டங்களை ஆராய்க. (08 புள்ளிகள்)

ii. தரம் இரண்டு இல் பயிலும் நடத்தைப் பிரச்சினையுடைய பிள்ளையொன்றைத் தெரிவுசெய்க. தரம் இரண்டு ஆசிரியையாக நீங்கள் பிள்ளையின் பிரச்சினைகளைத் தீர்க்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விபரிக்க. (12 புள்ளிகள்)

11.

i. பிள்ளை விருத்தி பற்றிய தத்துவார்த்தப் பார்வைகளை விபரிக்க. (08 புள்ளிகள்)

ii. பிள்ளை விருத்தியில் அறிகைப்புல, சமூகக் காரணிகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றனவென உதாரணங்களுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

12.

i. வகுப்பறையொன்றில் நடத்தை முகாமைத்துவம் சம்பந்தமான பிரச்சினையொன்றை இனங்காண்க. அதனை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

ii. நீங்கள் இனங்கண்ட பிரச்சினையின் பண்புகள் எவை? (06 புள்ளிகள்)

iii. இந்தப் பிரச்சினையை இழிவாக்க நீங்கள் என்ன செய்வீர்கள்? (10 புள்ளிகள்)

13. இலங்கையில் ஆலோசனை வழங்கல் சேவையில் ஈடுபடும் நிறுவனமொன்றைத் தெரிவுசெய்க. பின்வருவன தொடர்பாக சிறிய அறிக்கையொன்றினை எழுதுக.

அ. நிறுவனத்தினைப் பற்றிய சிறுவிளக்கம் (04 புள்ளிகள்)

ஆ. அந்த நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகள் (06 புள்ளிகள்)

இ. அந் நிறுவனத்தால் வழங்கப்படும் ஒரு சேவையினைப் பற்றிய உமது அபிப்பிராயம் (10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*